## 'வில்வேகம்'

ரசாயனப் பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக இயற்கை விவசாயிகள், மூலிகைச்சாறு, புகையிலைச்சாறு, நீம்அஸ்திரா, பிரம்மாஸ்திரா, அக்னி அஸ்திரா... எனப் பல பூச்சிவிரட்டிகளைப் பயன்படுத்தி வருகின்றார்கள். அந்த வரிசையில் தற்போது புதிதாகச் சேர்ந்திருக்கிறது, 'வில்வேகம்' எனும் உயிர்மப் பூச்சிக்கொல்லி.

இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக்கழகத்தின் கீழ், கோயம்புத்தூரில் இயங்கி வரும் வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் 'உயிர்ம வள மேம்பாட்டு பிரிவை'ச் சேர்ந்த என். செந்தில்குமார், சி. ராஜேஸ்கண்ணன், ஆர். சுமதி, பி. மணிவாசகம் ஆகிய விஞ்ஞானிகள் இதைக் கண்டுபிடித்திருக்கின்றனர். மூலிகை மரங்களில் ஒன்றான வில்வ மரத்தை வைத்து, கடந்த நான்காண்டுகளாக மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவில் இந்த 'வில்வேகம்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



வில்வேகம் கண்டுபிடித்த விஞ்ஞானிகள்



"வில்வ மரத்தின் இலை, பூ, பட்டை, காய், பழம் மற்றும் விதை போன்றவற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பொருட்களைப் பூச்சிக்கொல்லியாக உபயோகப்படுத்திப் பார்த்ததில் வில்வ விதையில் எடுக்கப்பட்ட எண்ணெய் சக்தி வாய்ந்த பூச்சிக்கொல்லியாக இருப்பது தெரிய வந்திருக்கிறது. குறிப்பாக, இந்த எண்ணெய்க்கு இலை உண்ணிகளை அழிக்கும் திறன் அதிகமாக இருக்கிறது. தேக்கு மரத்தின் இலைகளைச் சாப்பிட்டு பெருத்த சேதத்தை ஏற்படுத்தும் 'ஹைப்ளியா ப்யூரா' (Hyblaea Puera) எனும் இலை உண்ணிக்கு எதிராக இது சிறப்பாகச் செயலாற்றுகிறது. பல்வேறு பயிர்களிலும் இலை உண்ணிகளை அழிக்க இதைப் பயன்படுத்திப் பார்த்து ஆய்வுகளைச் செய்திருக்கிறோம். வேகமாக செயலாற்றி பூச்சிகளை அழிப்பதால், இதற்கு 'வில்வேகம்' என்று பெயரிட்டுள்ளோம்.

வில்வ மரத்தின் பாகங்களில் இயல்பாகவே பூச்சிகளை அழிக்கும் காரணிகளும், பூஞ்சை எதிர்ப்புத் தன்மையும் இருக்கின்றன. இதன் இலைகளில் இருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெய், தானியக் கிடங்குகளில் உள்ள பூச்சிகளைக் கட்டுப்படுத்துகின்றன. தவிர, ஈ மற்றும் கடுகுவண்டு ஆகியவற்றுக்கு எதிராகவும் இதைப் பயன்படுத்தலாம். நெல் பயிரில் வெடிப்பு நோயை உண்டாக்கும் பூஞ்சணத்தை அழிக்கவும் பயன்படுத்த முடியும். வில்வம், விவசாயிகளுக்கு சிறந்த பயனளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்களைப் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான வேலைகள் நடந்து வருகின்றன" என்கின்றனர், ஆய்வு மேற்கொண்ட விஞ்ஞானிகள்.

**தொடர்புக்கு:**இயக்குநர், வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் (IFGTB), ஆர்.எஸ்.புரம், கோவை - 641002. தொலைபேசி: 0422-2484100.

இணையதளம்: http//ifgtb.icfre.govin